மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.43/2022</u>

2026ம் ஆண்டு பிப்ரவரி 02ம் நாள் திங்கட்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கோவிந்தசாமி | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>02.02.2026 பி.வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1. 02.08.2002 ஆம் ஆண்டு எனது தகப்பனாரும் அவரது உடன் பிறந்த சகோதரர்களும் வா.சா.ஆ.2 பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினை ஆவணத்தின்படி எனது தகப்பனாருக்கு ஏ அட்டவணை சொத்துக்கள் பாகம் பிரிந்துள்ளது என்றால் சரிதான். டி, சி அட்டவணை சொத்துக்கள் எனது சித்தப்பாக்களுக்கு பாகம் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 பாகப்பிரிவினை ஆவணத்தில் பி ஏ பி வாய்க்காலை குறித்து சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.

2. வா.சா.ஆ.2 பாகப்பிரிவினை ஆவணத்தில் எனது சித்தப்பாவிற்கு பாகம் பிரிந்த பி மற்றும் சி அட்டவணை சொத்துக்களில் ரீ.ச.எண்.5/1ல் தென்வடல் ரோட்டில் கிழக்கு என்றுதான் பாகக்காரர் ஆவணத்தில் செக்குபந்தி கண்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி விவசாய அஞ்சு

பார் ஒன்னு சொத்துக்களை பொறுத்துதான் எனது சித்தப்பாக்களான சின்னசாமி முத்துசாமி மற்றும் அவரது வாரிசுகள் நளினிகாந்த் மனைவிகோமதி என்பவருக்கு 70 சென்ட் மற்றும் 70 சென்ட் ஆக மொத்தம் 1 ஏக்கர் 40 செண்டு பூமியை கிரயம் கொடுத்தார்கள் என்றால் சரிதான். வாதி வா.சா.ஆ.3 ஆவணமாக மேற்படி ஆவணத்தை தாக்கல் செய்துள்ளார் என்றால் ஆமாம்.

3. மேற்படி கிரய ஆவணத்தில் தென்வடல் ரோட்டிற்கு கிழக்கு என்றுதான் செக்குபந்தி கண்டுள்ளது பிஏபி வாய்க்காலுக்கு கிழக்கு என செக்குபந்தி சொல்லப்படவில்லை என்றால் சரிதான் மேற்படி கிரைய சொத்துக்களை பொருத்து கோமதி என்பவர் வடசின்னாரி பாளையம் பஞ்சாயத்தில் அனுமதி பெற்று அந்த சொத்துக்களை வீட்டுமனைகளாக மாற்றி விற்பனை செய்தார் என்றால் அவர் பஞ்சாயத்தில் அனுமதி எதுவும் பெறவில்லை. மேற்படி ஒரு ஏக்கர் 40 சென்ட் பூமிக்கு தென்புறத்தில் தான் எனது வீடு உள்ளது என்றால் ஆமாம். கோமதி என்பவர் கிரையம் பெற்ற ஒரு ஏக்கர் 40 சென்ட் பூமிகளை குமரன் நகர் என்று வீட்டுமனைகளாக விற்பனை செய்த விபரம் அருகில் குடியிருக்கும் எனக்கு நன்கு தெரியும் என்றும் அதை தெரிந்து கொண்டே தெரியாது என நான் வழக்கிற்காக மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

4. அந்த கோமதி என்பவர் கிரையம் பெற்ற ஒரு ஏக்கர் 40 சென்ட் பூமிகளை குமரன் நகர் இன்று வீட்டுமனைகளாக விற்பனை செய்த விபரம் அருகில் குடியிருக்கும் எனக்கு நன்கு தெரியும் என்றும் அதை தெரிந்து கொண்டே தெரியாது. என நான் வழக்கிற்காக மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. அந்த வீட்டு

மனைகளில் ஒரு மனையை தான் சைட் நம்பர் 1 என கண்டு வாதி கிரயம் பெற்றுள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது. இந்த வழக்கை யார் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் வழக்கு தாக்கல் செய்தபோதுதான் வாதி கிரையம் பெற்றுள்ள விபரம் எனக்கு தெரியும் கோமதி என்பவர் கிரையம் பெற்ற ஒரு ஏக்கர் 40 சென்ட் பூமிகள், எனது பூமிகளை விட மேடான பகுதிகள் என்றால் இல்லை அனைத்து பூமிகளும் சமமாக தான் உள்ளது.

5. வாதி கிரயம் பெற்று சொத்தில் வீடு கட்டி உள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வாதி வடக்கு பார்த்த வீடு கட்டி மேற்கு பார்த்த கடைக்கட்டி கிரைய சொத்தை அனுபவம் செய்து வருகிறார் என்றால், வடக்கு பார்த்து வாசல் வைத்து வீடு மட்டும் தான் உள்ளது மேற்கு வாசல் மற்றும் கடை எதுவும் கிடையாது. வாதி வீடு கட்டிய போது அந்த விபரம் தெரியுமா என்றால் தெரியும்.

6. நான் சொல்வது போல் வாய்க்கால் இருந்திருந்தால் நான் வாதி வீடு கட்டிய போதே ஆட்சேபனை செய்திருப்பேன் என்றால், வாதி வீடு கட்டிய சமயத்தில் வாய்க்காலில் தண்ணீர் சென்று வந்து கொண்டிருந்தது. இந்த வழக்கில் வாதி நீதிமன்ற ஆணையர் நியமனம் பெற்று முதல் முறை அழைத்து வந்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இரண்டாவது முறை நான் மனு போட்டு நீதிமன்ற ஆணையரை அழைத்துச் சென்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை மற்றும் வரைபடத்தில் பிஏபி வாய்க்கால் சென்று கொண்டிருந்ததற்கான அடையாளங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல.

7. பிஏபி வாய்க்கால் மூலம் தண்ணீர் பாய்ந்ததற்கான அடையாளம் எதுவும் இல்லை என நீதிமன்ற ஆணையர் தனது அறிக்கையில் சொல்லி உள்ளார் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் பிஏபி வாய்க்கால் இருந்திருந்தால் அது குறித்து நீதிமன்ற ஆணையர் தனது அறிக்கை மற்றும் வரைபடத்தில் சொல்லி இருப்பார் என்றும், நான் சொல்வது போல் பிஏபி வாய்க்கால் எதுவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்கு பின்னிட்டு தயார் செய்து அந்த ஆவணங்களை நான் எனது தரப்பில் ஒப்படைத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

8. வா.சா.ஆ.1 ஆவணத்திலேயே தாவா சொத்துக்கள் பி ஏ பி வாய்க்கால் பாசனத்திற்கு கட்டுப்படாத பூமிகள் என கண்டு பாகக்காரர் செய்துள்ளார்கள் என்றும் அந்த பாகக்காராருக்கு எதிராக நான் தற்போது எந்த உரிமையும் கோர இயலாது என்று சொன்னால் சரியல்ல. வாதி தாவா சொத்தை அமைதியான முறையில் வீடு கட்டி அனுபவித்து வருவதற்கு நான் இடையூறு செய்வதற்கு எனக்கு எந்த உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டியது என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2026.02.02 18:54:58 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்